Registered as a Newspaper

பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 33

வெள்ளிக்கிழமை
29 டிசெம்பர் 2023

முச்சந்தி முரளி



"சட்டமும் நான் உரைத்தேன்
தைரியமும் நான்
கொடுத்தேன்
பட்டம் மட்டும் வாங்கி வந்து
பாய்ந்து செல்லப்
பார்க்குதடி"



# தமிழரசுக்குள் உச்சப் பிளவு!

## சம்பந்தரை ஓரங்கட்டுகிறதா கட்சி?
## மாவைக்கு அவசரக் கடிதம்

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 29**

**தமிழரசுக் கட்சியின் அண்மைக்கால நடவடிக்கைகள் தன்னை ஓரங்கட்டும் வகையில் இருப்பதாகவும், தனது ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்படுவதாகவும், தனக்குத் தெரியாமலேயே திருகோணமலையில் கட்சியின் மாநாட்டை நடத்தும் முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்து அவசரக் கடிதம் ஒன்றை கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பி வைத்துள்ளார் கட்சியின் பெருந்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.**

11

## ஆணொருவரின் சடலம் மீட்பு!

மன்னார், டிசெ. 29
தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வேரி (செல்வபுரம்) பகுதியில் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

04

### யாழ். குடாநாட்டில்

## இந்த வருடம் மட்டும் 2,289 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் மட்டும் 2 ஆயிரத்து 289 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சத்தியமூர்த்தி

11

### யாழ். குடாநாட்டில்

## வீரியமான டெங்கு!

யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீரியம் மிக்க டெங்குத் தொற்று பரவி வருகின்றது. இதன் தாக்கம் தீவிரமாக இருப்பதால்தான் பொதுமக்கள் நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாமல் பாதிக்கப்படுகின்றனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆறு

04

## பக்றீரியா உ.கிழங்கை கொண்டுவந்தது யார்?

### விசாரணை நடத்த முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ்ப்பாணத்தில் 20.75 மெற்றிக்தொன் விதை உருளைக் கிழங்கு பக்றீரியாத் தொற்றுக்கு உட்பட்ட நிலையில் அண்மையில் மீட்கப்பட்டது. இந்த நிலையில், இந்த

04

### டெங்கு ஒழிப்புத் திட்டம்

## பிரதேச செயலர்களின் ஒத்துழைப்பு இல்லை!

### ஆளுநர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 29
டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் பிரதேச செயலர்களின் ஒத்துழைப்பு போதியளவில் கிடைக்கவில்லை

04

## வனவளத் திணைக்களத்துக்கு காணிகளை வழங்கவில்லை!

### யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 29
அண்மைக்காலமாக சர்ச்சைக்குள்ளாகிவரும் காணிகளில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எந்தக் காணிகளையும் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு வழங்கவில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.
சண்டிலிப்பாய், சங்கானை, வேலணை ஆகிய பகுதிகள் காணிகள் தேவை என்ற கோரிக்கை என்னிடம்

11

### போதைப்பொருள் விவகாரம்;

## பொலிஸாரின் பாரபட்சத்தை கடிந்துகொண்டார் டக்ளஸ்!

யாழ்ப்பாணம், டிசெ. 29
போதைப்பொருள் கடத்தலில் எவர் ஈடுபட்டாலும், போதைப்பாவனையாளராக எவர் அடையாளம் காணப்பட்டாலும் பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில்

11

### ஈழத்தமிழரில் பற்றுக்கொண்ட

## 'புரட்சிக் கலைஞர்' விஜயகாந்த் மறைவு



சென்னை, டிசெ. 29
தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தின் தலைவரும், தென்னிந்தியத் திரையுலகின் முன்னணி நட்சத்திரமும், தமிழ்த் தேசியத்தில் பற்றுறுதியும் கொண்டவருமான 'புரட்சிக் கலைஞர்' விஜயகாந்த் தனது 71ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.
வைதேகி காத்திருந்தாள், உழவர் மகன், புலன் விசாரணை, அம்மன் கோயில் கிழக்காலே, கப்டன் பிரபாகரன், ரமணா உள்ளிட்ட திரைப்

11

## டக்ளஸுடன் வந்தவரால் எம்.பி.க்களுக்கு அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது, அமைச்சர் டக்ளஸுடன் வந்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் இருக்கை வரையில் சென்று அவரை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டார்.

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீருக்கான குளத்தில் கலக்கப்படும் கழிவுகள்

## ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 29

**கிளிநொச்சி குளத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வரும் நிலையில் அந்தக் குளத்தில் கழிவுகள் கலக்கப்படுவது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டபோதும் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை.**

குளத்தின் அமைவிடம் காரணமாக கிளிநொச்சி மருத்துவமனைக் கழிவுகள், இரத்தினபுரம் வாய்க்கால் பகுதியிலிருந்து கழிவுகள், குளத்தின் அருகிலுள்ள குடியிருப்புக் கழிவுகள் எனப் பல தரப்பட்ட கழிவுகள் குளத்தை வந்தடைகின்றன. இது தொடர்பாகவே நீண்டநேரம் கூட்டத்தில் ஆராயப்பட்டது. தற்போது கிளிநொச்சி குளத்துக்கு இரணைமடுக்குளம் வழியாகவே நீர் வழங்கப்பட்டு அது சுத்திகரிக்கப் பட்டு குடிதண்ணீராக வழங்கப்படும் நிலையில் இரணைமடுக் குளத்தில் இருந்து நேரடியாகவே குடிதண்ணீருக்கான நீரைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் கருத்துகள் பரிமாறப்பட்டன. ஆனால் இறுதி முடிவுகள் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை. (ஒ-13)



## 3 லட்சம் தென்னங்கன்று இந்த வருடம் விநியோகம்

### தென்னை அபிவிருத்திச் சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

வடக்கு மாகாணத்தில் இவ்வாண்டில் சுமார் 3 இலட்சத்து 36 ஆயிரத்து 400 தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று தென்னை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 600 தென்னங்கன்றுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 400 தென்னங்கன்றுகளும் கிளிநொச்சியில் 67 ஆயிரத்து 400 தென்னங்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன. அநேக தென்னஞ்செய்கையாளர்களுக்கு மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. (ச-17)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 29

தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கலையாபரணங்கோட்டை வள்ளியம்மாள் கோயிலில் திருவாசக முற்றோதல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (ச-9)

# நவீன சுத்திகரிப்பு முறை ஜனவரியில் ஆரம்பம்!

### கிளிநொச்சி வடிகாலமைப்புச்சபை தகவல்

கிளிநொச்சி, டிசெ. 28

கிளிநொச்சி குளத்திலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ள தற்போது நவீன முறையில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படுகிறது என்று நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்குளத்தில் பல்வேறு கழிவுகள் அதிகளவில் கலப்பதால் தற்போதுள்ள சுத்திகரிப்புமுறை மூலம் எம்மால் சிறந்த முறைமை பேணப்பட முடியவில்லை. அதற்கமைய புதிய சுத்திகரிப்பு நிலையப் பணிகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-113)

## பான் விற்கும் ஓட்டோவில் போதைப்பொருள் விற்பனை

### ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 29

மிரிஹான பிரதேசத்தில் பாண் விற்பனை செய்யும் முச்சக்கரவண்டியில் போதைப்பொருளையும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 37 ஆயிரம் லீற்றர் நிறையுடைய சட்டவிரோத மதுபானம் . ஆயிரத்து 200 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டன.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## பூட்டு உடைத்து சைக்கிள் களவு

யாழ்ப்பாணம், டிசெ. 29

நல்லூர் சிவன் கோவிலுக்கருகே வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிளொன்று பூட்டுடைத்துத் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நல்லூர் சிவன் கோவில் தேர்த் திருவிழாவுக்குச் சென்ற பெண்ணொருவரின் சைக்கிளே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது. (ச-66)

## 5 அமைப்புகளுக்கு தற்காலிகத் தடை!

கொழும்பு, டிசெ. 29

விளையாட்டுத்துறையுடன் தொடர்புடைய ஐந்து அமைப்புகள் விளையாட்டுத்துறை அமைச்சால் தடை செய்யப்பட்டுள்ளன.

குதிரைப்பந்தயக்கழகம், கபடிக் கழகங்களின் சம்மேளனம், மல்யுத்தக் கழகங்களின் சம்மேளனம், ரோலர் ஸ்கேட்டிங், சீட்டாட்டக் கழகங்களின் சம்மேளனம் என்பவற்றுக்கே தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விளையாட்டுத்துறை அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. (ச-6)



# பலரது கடின உழைப்பை சிலரது தவறு பாழாக்கும்

### நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 29

மருத்துவர்கள், தாதியர் என மருத்துவத்துறையினர் தங்களது முழுமையான அர்ப்பணிப்புடன் இருக்கின்ற வளங்களைக்கொண்டு பணியாற்றுகின்றார்கள். ஆனால், அந்தத் துறையிலுள்ள ஒரு சிலரது தவறுகளால் சில உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. அது அந்தத்துறைக்கே களங்கத்தை ஏற்படுத்திவிடுகின்றது.

-இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்றால் உயிரிழப்புகள் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு ஏற்றப்பட்ட ஊசியின் ஒவ்வாமையால் அவர் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதில் மருத்துவத்துறையினர் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

இத்தகைய சம்பவங்களுக்கு ஒட்டுமொத்தமாக மருத்துவர்களையும், தாதியர்களையும், உதவியாளர்களையும் குற்றம் சுமத்த முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எதிர்காலத்திலாவது அவை நடைபெறாமல் இருக்க கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படவேண்டும்- என்றார். (ஒ-27)

## அகத்தியர் குருபூஜை

யாழ்ப்பாணம், டிசெ. 29

நல்லூர் ஸ்ரீஸ்கந்தபதி கலாமன்றம் நடத்தும் அகத்தியர் பெருமான் குருபூசையும், கலாமன்ற வெள்ளிவிழாவும், நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் அருளுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆசியுரையை சிவஸ்ரீ.மகாதேவ.சோமசுந்தரக்குருக்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ச)

# ரணிலின் பயண ஏற்பாடுகள்; கிளிநொச்சியில் ஆராய்வு

கிளிநொச்சி, டிசெ. 29

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குப் பயணம் தொடர்பில் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரையில் வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை முன்னிலைப்படுத்திய திட்டங்கள் எவ்வாறு முன்வைக்கப்படவேண்டும் என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஒ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்த வருமானம் 60.5 வீதமாக வீழ்ச்சி

## புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்

**கொழும்பு, டிசெ. 29**

**நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக குடும்பங்களின் மாதாந்த வருமானம் 60.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வருமான வீழ்ச்சியால் 91 சதவீதமான குடும்பங்களின் சராசரிச் செலவு அதிகரித்துள்ளது.

அதேவேளை மாதாந்தச் செலவு அதிகரித்துள்ள குடும்பங்களின் உணவுச்செலவு 99.1 வீதத்தாலும், போக்குவரத்துச் செலவு 83 வீதத்தாலும் அதிகரித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியால் 3 முதல் 21 வயதுக்குட்பட்டவர்களில் 54.9 சதவீதமானவர்கள் கல்வியில் பின்னடைவைச் சந்தித்துள்ளனர் என்றும் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது- என்றுள்ளது. (ச-இ)

## சிறையில் இடநெருக்கடி தற்காலிகமாக ஏற்பாடு!

கொழும்பு, டிசெ. 29

கைதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதையடுத்து அரசாங்கத்துக்குச் சொந்தமான பாதுகாப்பான வெற்றுக் கட்டடங்களை அடையாளம் கண்டு அங்கு கைதிகளை அடைப்பதற்குத் தற்காலிக ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

-இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

'யுக்திய' நடவடிக்கையால் கைதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சிறைச்சாலையில் நிலவும் நெரிசலுக்கு நீண்டகாலத் தீர்வாக மில்லனிய பிரதேசத்தில் ஐம்பது ஏக்கர் காணி தெரிவுசெய்யப்பட்டு அங்கு கட்டடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## தென்மராட்சியிலும் டெங்கால் நெருக்கடி

யாழ்ப்பாணம், டிசெ. 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு பெருமளவானோர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படும் நிலையில் நோயாளர் விடுதிகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலையால் டெங்கின் தாக்கம் அதிகரித்து வருவதால் பெருமளவோனோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வருகின்றனர்.

மருத்துவமனைக்கு வருபவர்களில் பெரும்பாலானோரின் குருதிப்பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் டெங்குக் காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

## பொருத்து வீடுகள் பெற மக்கள் பச்சைக்கொடி!

யாழ்ப்பாணம், டிசெ. 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் 50 இலட்சம் ரூபா பெறுமதியான பொருத்து வீட்டைப் பெறுவதற்கு இதுவரை சுமார் ஆயிரத்து 200 பேர் பதிவு செய்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நிரந்தர வீடுகளற்றோர் பொருத்து வீடு அமைக்க விரும்பின் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் நிரந்தர வீடுகள் இல்லாத ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தமது பெயர்களைப் பதிவு செய்து வருகின்றனர். (ச-9)

## விதை வெங்காயம் பற்றாக்குறை

கொழும்பு, டிசெ. 29



யாழ். குடாநாட்டில் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட விவசாயிகள் தயாராகிவரும் நிலையில், விதை வெங்காயத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பெரும்போக சின்ன வெங்காயச் செய்கை தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளது. சந்தைகளில் வெங்காயத்தின் விலை அதிகரிப்பையடுத்து விதை வெங்காயக் கையிருப்பு குறைந்ததனால் அதற்றுக்குப் பெரும் கிராக்கியும் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ச-17)

## உருளைக்கிழங்கில் பக்றீரியா அறிக்கை கோருகிறார் அமைச்சர்



கொழும்பு, டிசெ. 29

மானிய அடிப்படையில் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த உருளைக்கிழங்கில் ஏற்பட்ட பக்றீரியாத் தாக்கம் தொடர்பில் ஆய்வறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர.

விவசாயப் பணிப்பாளர் நாயகத்துக்கு அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த நிலையில் கொழும்பிலிருந்து விசேட குழுவொன்று யாழ்ப்பாணத்தில் களஞ்சியப்படுத்தப்பட்ட விதை உருளைக் கிழங்குகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளது. (ச-இ)

## பதினம் தெரியுமோ?

**ர**ஜினிகாந்த் நடிச்ச சிவாஜி எண்ட படத்தில ஒரு வசனம் பேசுவார். 'கண்ணா, பன்றிகள்தான் கூட்டமா வரும், சிங்கம் சிங்கிளாத் தான் வரும்' இது தான் அந்த வசனம். தன்ர திறமையில நம்பிக்கையில்லாதவை தான் கும்பலா வந்து 'கோவிந்தா' போடுவினம். முக்கியமா அரசியல்வாதியளிட்ட இந்தக் கும்பலா வாற வியாதி இருக்கு. என்னதான் ஆயுதத்தை விட்டிட்டு ஜனநாயக நீரோட்டத்துக்க குதிச்சம், குளிச்சம் எண்டு கதைவிடுறவையிட்டக்கூட இந்தக் கும்பல் புத்திதான் இருக்குது.

இப்ப மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கு. கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில ஒருங்கிணைப்புக்குழுவின்ர இணைத்தலைவரா இருக்கிற அமைச்சர், இந்தக் கூட்டங்களுக்கு தனிய வரமாட்டார். அவரோட எப்பிடியும் இருபது, முப்பது பேர் வந்து இந்த மீட்டிங்கில அழையா விருந்தாளியளா முன்னுக்குள்ள கதிரையளில குந்திப்போடுவினம். இதால அதிகாரிமாரே கதிரையில்லாமல் அங்கையிங்கை எண்டு ஓடித்திரிவினம். (இதையெல்லாம் முதலும் ஒருக்கா பட்சி சொல்லியிருக்கு) இப்பிடிக் கதிரையை நிரப்புறதுக்காக வாற கட்சிக் கும்பலுக்கு ரீ, சிற்றுண்டி எண்டு அதுக்கும் வீணா அரசாங்கக் காசுதான் அழியுது. சரி, கதிரை நிரப்ப வந்த வேலைக்காக அந்த ரீயைக் குடிச்சிட்டு, றோலைக் கடிச்சதோட அவை நிண்டாலாவது பரவாயில்லை. அதுக்கும் அங்கால போய் குடுத்ததுக்கும் மேலால அவை கூவ வெளிக்கிடுறதுதான் கூட்டத்தை நடத்திறவைக்கே சங்கடமாக் கிடக்காம்.

நேற்று யாழ்ப்பாணத்தில நடந்த ஒருக்கிணைப்புக் குழுக் கூட்டத்தில கூட, இந்தக் கட்சிக்கார கும்பல் வந்து, அங்க வந்த மற்றக் கட்சி எம்.பி.மாரோட தேவையில்லாத பிரச்சினை எடுக்க வெளிக்கிட்டிருக்கு. இப்பிடி தன்ர கட்சிக்கார கும்பல், கூட்டத்தைக் குழப்பிறதோட எம்.பி.மாருக்கு 'அடிப்பன், உதைப்பன், வெட்டுவன்' எண்டெல்லாம் வெருட்டுறதை கட்சியின்ர தலைவரான அமைச்சர் கட்டுப்படுத்தியிருக்க வேணும். ஆனால் அவரோ மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு 'எப்பிடி எங்கட ஆக்களின்ர பவர்?' எண்டமாதிரி பெருமைபொங்க பார்த்து ரசிச்சுக் கொண்டிருந்தார். அதோட மற்றக்கட்சி எம்.பி.மாரிட்ட 'நீங்கள் இப்பிடிக் கதைச்சால் அவை அப்பிடித்தான் கதைப்பினம்' எண்டு வியாக்கியானம் வேற.

இப்பிடி சொந்தக் கட்சிக்காரரை கும்பலாக் கூட்டிக் கொண்டு வந்து, ஓசியில ரீ, வடை, றோல் எண்டு அரசாங்கக் காசில ஊட்டி வளர்த்து, தனக்கு எதிராக் கருத்துச் சொல்றவையை வெருட்டிறவரையெல்லாம் அமைச்சரா வைச்சிருக்கிற பெரும்பேறு எங்கட இனத்தைத் தவிர, வேற ஆருக்கும் கிடைக்காது கண்டியளோ. மத்தியிலே கூத்தாட்டம், மாவட்டத்தில குழப்பாட்டம், இதுதான் அவையின்ர இப்பத்தக் கொள்கைபோல.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்



தோற்றம்
22.01.1953

மறைவு
29.11.2023

கடந்த (29.11.2023) புதன்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

அமரர்
திருச்செல்வம் சறோஜா

திதி: தேய்பிறை துவிதியை

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (29.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் மதியபோசன நிகழ்வு நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு பலவழிகளிலும் உதவி புரிந்த நெஞ்சங்களுக்கும், நேரில், தொலைபேசி, சமூக ஊடங்களுடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்
28 . 07 . 1934



ஆண்டவன் அடியில்
30 . 11 . 2023

எமது குல விருட்சம் அன்னை
அமரர் கந்தையா திரவியம்

காலத்தின் வெளிதன்னில் தாயுந்தன் நினைவுகள் தாலாட்டு இசைக்கிதம்மா...
எண்திசையும் நடந்திட்ட நின்பாதச்சுவடு தானிங்கு எமையிங்கு விழிக்கிதம்மா...
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப்போனாலும்...
எம் முன்னே உன் வதனம் நீக்கமறத் தெரியுதம்மா...
இழைத்துளைத்த உன்விரலை முத்தமிட தேடுகிறோம்...
முடிவில்லா காலத்தில் அது இன்னும் முடியுமோம்மா...
வயல்மேடு வீடுநிலம் வழியெங்கும் உன்மூச்சு...
விழிதாண்டி வந்திங்கு உன்சோகம் அதுதன்னை விதம்விதமாய் சொல்லுதம்மா...
அகலொளியாய் எம்வாழ்வில் அகல்நீங்கி நாம்வாழ ...
அடைக்கலமாய் நீயென்றும் அரணாக அனுதினமும் அருகிருந்து காப்பாயம்மா...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (30.12.2023) சனிக்கிழமை நண்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடிச்சந்தி, சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
071 9611 732

CR 41404TA-1

### பிரதேச...

என்று வடமாகாண ஆளுநர் குற்றஞ் சாட்டியுள்ளார்.
யாழ்ப்பாணம்மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் என்பதுவெறுமனே குப்பைகளைஅகற்றுவது மட்டுமல்ல. கைவிடப்பட்டகாணிகளில் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக உள்ள இடங்களை அழிப்பதும் தான். ஆனால், கைவிடப்பட்டகாணிகள் விடயத்தில் பிரதேச செயலர்களிடம் இருந்து முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. டெங்குத் தொற்றை அழிக்கும் விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.
(அ-ம-26-125)

# நாகபட்டினம் - காங்கேசன்துறை சரக்குக் கப்பற்சேவை விரைவில்

யாழ்ப்பாணம், டிசெ. 29
எதிர்வரும் தைப்பொங்கலின் பின்னர் நாகப்பட்டினம் காங்கேசன்துறைக்கு இடையிலான சரக்குக் கப்பற்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.
இந்தக் கப்பற்சேவைக்கான வளநிலைகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.
குறித்த கூட்டத்தில் இந்தியாவில் இருந்து வர்த்தகப் பரிமாற்றத்துக்காக டொலரைப் பயன்படுத்தல், இந்தியாவில் இருந்து சில பொருள்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்தல், சுங்கம் சாதகமான பதிலை வழங்கினால் இந்திய ரூபாவில் வர்த்தம் செய்தல், முதலீட்டாளரின் நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் அவர்களுக்கான கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மண்ணெண்ணெய் இறக்குமதிக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதன் மூலம் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களுக்கு அனுகூலங்களை ஏற்படுத்தல், தமிழ் மக்கள் நெருக்கடிகள் இல்லாமல் வாழ்வதற்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வர்த்தகர் ஒருவர் இறக்குமதிக்கான கோரலை வழங்கியுள்ளார். கோரல்களைப் பொறுத்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
அத்துடன் ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டணங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.
கலந்துரையாடலில், யாழ். இந்தியத் துணைத்தூதுவராலய அதிகாரி மனோஜ்குமார், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ்.மாவட்ட வர்த்தகர்கள், மறவன்புலவு சச்சிதானந்தன், சிவசேனை அமைப்பினர், இந்திய, இலங்கை வங்கிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-125)

### ஆணொருவரின்...

கந்தசாமி றொனால்ட் றீகன் (வயது -47) எனும் நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். நீர்நிலையொன்றுக்குள் இருந்து மீட்கப்பட்ட அந்தச் சடலம் பகுதியளவில் உருக்குலைந்த நிலையில் உள்ளது. இறப்பு எவ்வாறு சம்பவித்தது என்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-213)

### வீரியமான...

முகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
டெங்குத் தொற்று நான்கு படிநிலைகளைக் கொண்டதாகக் காணப்படும். வழமையாக முதலாம் மற்றும் இரண்டாம் படிநிலைகளைக் கொண்ட டெங்குத் தொற்றுத்தான் ஏற்படும். இந்த முதலிரு வகைத் தாக்கங்களையும் எதிர்க்கக் கூடிய நோய் எதிர்ப்புச் சக்தியே எமக்குள்ளது. ஆனால், மூன்றாம் படிநிலை டெங்குத் தொற்று ஏற்பட்டால் அதன் தாக்கம் சற்று அதிகமாகக் காணப்படும். காரணம் இது நோய் எதிர்ப்புச் சக்தியைச் சவாலுக்கு உட்படுத்துகின்றது. வழக்கமாக வடமேல் மாகாணம், மேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்களில்தான் இந்த வகை டெங்குத் தொற்று ஏற்படும். இம்முறை யாழ்ப்பாணத்தில் மழை அதிகமாகவும், வெயில் குறைவாகவும் காணப்படுகின்றது. வழக்கமாக இங்கு வெயில் அதிகம் இருப்பதால் நீர் காய்ந்துபோகும். ஆனால் இவ்வருடம் அந்தச் சந்தர்ப்பம் இல்லாமற்போயுள்ளது. இதுவும் டெங்கு தீவிரமாகப் பரவுகின்றமைக்கு ஒரு காரணம்.
கொழும்பிலிருந்து வருகைதந்த குழு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்ட ஆய்வில் மரத்தின் சிறிய பொந்துகளில்கூட டெங்குக் குடம்பி அடையாளம் காணப்பட்டுள்ளது. இது வழமையை விட விசித்திரமாக உள்ளது. காரணம் சூரிய ஒளியின்மை இல்லாத இடத்திலும் டெங்குக் குடம்பிகள் இப்போதுதான் இனங்காணப்பட்டுள்ளன. எனவே காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும் - என்றார். (அ-ம-125-26)

### பக்றீரியா...

உருளைக்கிழங்கு அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்றும் இறக்குமதி செய்யும்போதே உருளைக்கிழங்கில் பக்றீரியாத் தொற்று இருந்தமையால் அது கட்டுநாயக்கவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே மேற்படி தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
கட்டுநாயக்கவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தனிமைப்படுத்தப்பட்ட விதை உருளைக்கிழங்கை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்தது யார்? என்றும் இது தொடர்பில் விரிவான விசாரணை தேவை என்றும் ஆளுநர் வலியுறுத்திய நிலையில், இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்த விதை உருளைக்கிழங்கு தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு எந்த விடயமும் தெரிவிக்கப்படவில்லை என்பதும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அடுத்த வருடம் ரஹங்கல எனும் இடத்திலிருந்து உள்ளூர் விதை உருளைக்கிழங்குகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வேட்டைக்குப் பின்னால்...!


நாடு முழுவதும் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்கள் என்பவற்றுக்கு முடிவு கட்டுவதற்கான தேடுதல் - சோதனை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஒருவார காலத்துக்குள் 14 ஆயிரம் பேர் வரையில் சந்தேகத்தில் கைதாகியிருக்கின்றனர். பெருமளவு போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதேநேரத்தில் போதைப்பொருள் ஊடாக ஈட்டியதாகக் கருதப்படும் பெருந்தொகையான சொத்துகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. பொலிஸாரின் இந்தத் திடீர்ப் பாய்ச்சல் மக்கள் மத்தியில் சிலாகிக்கப்பட்டாலும் அதைவிட அதிகமாக சந்தேகக்கண் கொண்டு பார்க்கப்படுகின்றது.

பதில் பொலிஸ்மா அதிபராக சித்திரவதைக் குற்றவாளி தேசபந்து தென்னக்கோன் அண்மையில் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவரது நியமனம் பல சர்ச்சைகளை உருவாக்கியிருக்கின்றது. பலரும் இந்த நியமனத்தை கேள்விக்கு உட்படுத்துகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ககூட இந்த நியமனத்தை முழு மனதுடன் வழங்கவில்லை. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு வேண்டப்பட்டவர் தேசபந்து தென்னக்கோன். இவர் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் உள்ளன. அதிலும் உயர் நீதிமன்றத்தால் சித்திரவதைக் குற்றவாளியாக இனம் காணப்பட்டு இழப்பீடு செலுத்தவேண்டிய ஒருவராக தேசபந்து தென்னக்கோன் இருக்கின்றார். அப்படிப்பட்ட ஒருவர் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுவினருக்கு எதிராக இந்தளவு தூரம் செயற்படுவதே மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

தனது நியமனத்தை கேள்விக்குட்படுத்துவதை மறைக்கவே தேசபந்து தென்னக்கோனால் இந்தத் தேடுதல் நாடகம் போடப்படுகின்றதா? எதிர்காலத்தில் தேசபந்து தென்னக்கோனை பதவியிலிருந்து விலக்கும் நிலை ஏற்பட்டால், போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை ஒழிப்பதைத் தடுக்கும் நோக்குடன் தன்னை பதவி நீக்க முற்படுவதாக அவர் குற்றம் சுமத்துவதற்கு ஏதுவாக இதைச் செய்கின்றாரா? ஆரம்பத்தில் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக்குழுச் சந்தேகநபர்களைக் கைது செய்வதுபோன்று ஆரம்பித்து மக்கள் மத்தியிலிருந்து பெரும் வரவேற்பைப்பெற்று எதிர்காலத்தில் தனது அரசியல் எதிரிகளை இதேபாணியில் அவர் ஒழித்துக்கட்டப்போகின்றாரா? இவ்வளவு காலமும் இத்தனை ஆயிரம் போதைப்பொருள் குற்றவாளிகள் இருந்தது பொலிஸுக்குத் தெரியாதா? இப்படிப்பல கேள்விகள், சந்தேகங்கள் மக்கள் மத்தியிலிருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கலாம் ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படக் கூடாது என்பது நீதியின் முதுமொழி. ஆனால், பொலிஸார் ஆரம்பித்துள்ள இந்த வேட்டையில் இவையெல்லாம் கணக்கிலெடுக்கப்படாமல் உள்ளதுதான் வேதனைக்குரியது. சரியைத் தவறான வழியில் செய்தாலும் தவறுதான். தவறைச் சரியான வழியில் செய்தாலும் தவறுதான். சரியைச் சரியான வழியில் செய்வதே சரி. எனவே பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டை கண்மூடித்தனமாக ஆதரிப்பதும் பெரும் தவறுதான். பொலிஸாரால் கைதாகுபவர்கள் உண்மையில் சந்தேகநபர்கள்தானா? என்பதையும் தீர ஆராயவேண்டும்.

மக்கள் மத்தியில் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழு ஆகியனவற்றுக்கு எதிரான மனவுணர்வு இருப்பதைப் பயன்படுத்தி தங்களுக்கு வேண்டப்படாதவர்களையும் இதன்போது சிக்கவைக்க சில தரப்புகள் முயற்சிக்கக் கூடும். கடந்த காலங்களிலும் தமிழர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்டபோது அதன் ஆபத்தை உணர்ந்துகொள்ளாமல், இனவாதச்சிந்தனையில் சிந்தித்துச் செயற்பட்ட பெரும்பான்மைச் சமூகமும், முஸ்லிம்களும் 2022 இலும், 2019இலும் அதனைத் தாமும் பட்டுணர்ந்திருப்பார்கள். எனவே தற்போதும் பொலிஸாரின் வேட்டை தொடர்பில் அகலக்கண்கொண்டு அவதானித்துக் கொண்டேயிருக்கவேண்டும். ஏனெனில் இந்த நடவடிக்கைக்கு உத்தரவிட்டு அதற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் பதில் பொலிஸ்மா அதிபர் ஒன்றும் கறைபடியாதவர் அல்லர்.




# இலங்கை - சீனா நெருக்கம் இந்திய நலனுக்குப் பாதகம்

## முன்னாள் வெளிவிவகார இணை அமைச்சர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ.29**

**இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகளை இலங்கை செவிமடுக்கவேண்டும் என்று இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார இணை அமைச்சர் எம்.ஜே.அக்பர் தெரிவித்துள்ளார்.**

சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் தொடர்ச்சியாக இலங்கைக்குவரும் நிலையில், இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார இணை அமைச்சர் எம்.ஜே.அக்பர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவும், சீனாவும் உண்மையில் தற்போதும் இராணுவ மோதலில்தான் உள்ளன. எல்லைப் பிரச்சினை தீர்க்கப்படாததால் அந்த மோதல் நிலைமை இன்னமும் தொடர்கின்றது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பாக இந்தியா விசேட கரிசனைகளைக் கொண்டுள்ளது. அதேபோன்று எமது கரிசனைகளை இலங்கைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# கைபேசிகளின் பதிவு கட்டாயம்

கொழும்பு, டிசெ. 29

கையடக்கத் தொலைபேசியை கொள்வனவு செய்யும்போது அந்தக் கைப்பேசி தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட கைபேசியா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் கைபேசியின் IMEI எண்ணை 1909 தொலைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் அதை உறுதிப்படுத்தமுடியும் என்று ஆணைக்குழுவின் இணக்கப் பணிப்பாளர் திருமதி மேனகா பத்திரண தெரிவித்தார். (ச-6)

# மாஸ்க்கை தவிர்க்காதீர்

புதிய கொரானா வைரஸ் பரவிவரும் நிலையில் இயன்றவரை மக்கள் முகக்கவசம் அணிந்துகொள்வதை தவிர்க்கக் கூடாது என தொற்றுநோயியல் நிறுவகத்தின் விசேட மருத்துவர் நிபுணர் சிந்தன பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலகின் பல நாடுகளிலும் கொரோனா வைரஸின் துணை பிறழ்வான ஜே.என்.1 பரவல் அவதானிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இதன் நிலைமை குறித்து அறிந்து கொள்வதற்காக மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. (ச-இ)

# பெப்ரவரி தொடக்கத்தில் 'அஸ்வெசும' மறுகட்டம்!

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் இரண்டாம், மூன்றாம் கட்டக் கொடுப்பனவுகள் எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் வழங்கப்படும் என்று 'அஸ்வெசும' சபை தெரிவித்துள்ளது. அதேவேளை 'அஸ்வெசும' கொடுப்பனவுப் பணிகளில் ஈடுபடும் கிராம அலுவலர்களுக்கும் மாதாந்தக் கொடுப்பனவாக 2 ஆயிரத்து 500 ரூபா வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-6)

# எரிபொருள் நுகர்வு இம்முறை குறைவு

ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் பண்டிகைக் காலத்தையொட்டி இந்த ஆண்டு எரிபொருள் நுகர்வு கணிசமாகக் குறைந்துள்ளது என்று பெற்றோலிய பிரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ கூறுகையில்; எரிபொருளுக்கான நுகர்வுத் தேவை சுமார் 50 சதவீதத்தால் குறைந்துள்ளது. இதனால் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவித்தார். (ச-இ)

## நாளை

**30.12.2023**

**சனிக்கிழமை**

**மார்கழி 14**

சங்கடஹர சதுர்த்தி

சுபநேரம் : 03.29 - 04.59

ராகுகாலம் : 09.29 - 10.59

## நாளொரு நல்வார்த்தை

**ஒரு சிந்தனை நம்மை நெருப்பை விட அதிக சூடாக்கிவிடுகிறது.**

**- ஹென்றி வாட்ஸ்வொர்த்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**



## மகரம்
### விலகும் ஜன்மசனி

*பேச்சை குறைத்து ஆக்கபூர்வமான செயல்களில் ஆர்வம் காட்டும் மகர ராசி அன்பர்களே...*

ஜன்மசனியாக உங்கள் ராசியில் அமர்ந்த சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி முதல் விலகி கும்ப ராசிக்குள் செல்கிறார்.

கடுமையான அழுத்தம் ஒன்றிலிருந்து விடுதலை ஆனதுபோல் உணர்வீர்கள். இதுவரை என்னவெல்லாம் உங்களுக்குப் பிரச்சினையாக இருந்ததோ அவை எல்லாம் மெல்ல மெல்ல விலகும். சுதந்திரக் காற்றை சுவாசிப்பீர்கள். குடும்பத்தில் கடும் நெருக்கடிகள் பிரச்சினைகள் அனைத்தும் விலகும். பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேர்வார்கள். இதுவரை குறைவாக இருந்த உங்களின் பணப்பை நிரம்பும்.

மனம் அமைதியாகும். எதிர்மறை எண்ணங்கள் விலகி நேர்மறையாகச் சிந்திப்பீர்கள். உங்களைக் கண்டும் காணாமல் உறவினர்களும் நண்பர்களும் இனி வலிய வந்துப் பேசுவார்கள். மனப்பயம் முற்றிலும் நீங்கும். ஆரோக்கியம் சீராகும்.

ஏழரைச் சனி இன்னும் நடந்துகொண்டுதான் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். கிடைக்கும் வாய்ப்பில் அளவுக்கு மீறி எதையும் செய்ய முயல வேண்டாம். கண்டிப்பாக குறுக்கு வழிகளில் முயலவேண்டாம். உடல் நலத்தில் கூடுதல் கவனம் தேவை.

**வியாபாரம்:** தொழிலில் உங்களின் அணுகுமுறை மாறும். போட்டியாளர்களைச் சாதுரியமாகச் சமாளிப்பீர்கள். தொழில் செய்யும் இடத்தைப் புதுப்பிப்பீர்கள். ஆதாயம் உண்டு. ஒத்துழைப்புத் தருவார்கள்.

**உத்தியோகம்:** அலுவலகத்தில் இருந்த போராட்டச் சூழ்நிலை மாறும். எதிர்பார்த்த சம்பள நிலுவைத் தொகை கைக்குவரும். என்றாலும் அலுவலகத்தில் தேவையற்ற பேச்சுகளைத் தவிர்த்துவிடுங்கள். கணினி மற்றும் தகவல் தொடர்புத்துறையில் பணி செய்பவர்களுக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு அமையும்.

**மொத்தத்தில் இந்த சனிப்பெயர்ச்சி, அசந்து இருந்த உங்களை உற்சாகமூட்டி சாதனைகளை நோக்கி வழிநடத்தும்.**

**செலவுகளில் மட்டும் சிக்கனம் செலுத்தினால் வாழ்க்கை இனிமையாக மாறும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும்,வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

## பரிசளிப்பு நிகழ்வும் அலகுகள் திறப்பும்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வும் கற்றல் அலகுகள் திறப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் சி. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. ஸ்ரீகுமரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-66)

## மீன்குஞ்சுகள் விடுமாறு கோரும் மீனவர்கள்

கிளிநொச்சி, டிசெ. 29

குளங்களுக்குள் மீன் குஞ்சுகளை விட்டு உதவுங்கள் என நன்னீர் மீன்பிடியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பெய்த பெரும் மழை காரணமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சகல குளங்களும் வான்பாய்ந்துள்ளன. இதன் காரணமாக பெருமளவு மீன்கள் குளங்களில் இருந்து வெளியேறி உள்ளன. சில குளங்களில் மீன்கள் வெளியேறாமல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் பல குளங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததன் காரணமாக வெள்ளத்துடன் மீன்கள் கடலைச் சென்றடைந்துள்ளன. எனவே குளத்தில் நன்னீர் மீன் குஞ்சுகளை விடுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-13)

## திருவாசக முற்றோதல்

இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையில் இடம்பெறவுள்ளது. (ச-66)

## காற்றால் பறந்தது கூரை

யாழ்ப்பாணம், டிசெ. 29

மூளாயில் அண்மையில் வீசிய கடும் காற்றால் வீட்டின் கூரை பறந்துள்ளது.

சுமார் 9 சீற்றுக்கள் 50 மீற்றர் தூரம் வரையில் காற்றில் அள்ளிச்செல்லப்பட்டுள்ளன. இதனையடுத்து பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு யாழ். மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவால் தற்காலிக தறப்பாள் மூலம் கூரை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 லட்சம் ரூபா வீடு குழப்பத்தில் மக்கள்!

## தெளிவூட்டத் தனிக்கூட்டம் ஆளுநர் சார்ள்ஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

வடமாகாணத்தில் தனியார் நிறுவனம் ஒன்றின் 50 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டம் தொடர்பில் மக்களிடம் போதிய தெளிவு இல்லை. மக்கள் குழப்பத்தில் உள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்றுச் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து, தொடர்புடைய நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் ஒருங்கிணைந்து இது தொடர்பில் விசேட கூட்டமொன்றை ஏற்பாடு செய்வதாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். 50 இலட்சம் ரூபா வீட்டுத்திட்டத்துக்கு மக்கள் விண்ணப்பிப்பது குறைவாக உள்ளது என்ற கருத்தை ஆளுநர் முன்வைத்தார். இதையடுத்தே வீட்டுத்திட்டம் தொடர்பில் போதிய தெளிவு மக்களிடமோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ இல்லை. குறிப்பாக, வீட்டில் பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் சோலரையும் சேர்த்தா இந்தத் தொகை அல்லது வீடு 50 இலட்சம் ரூபாவா என்பதில் தெளிவு இல்லை என்றும், வீட்டின் உறுதிப்பத்திரம் பயனாளர்களுக்குச் சொந்தமா அல்லது அதன் உரிமம் எவரிடம் இருக்கும் என்பது தொடர்பிலும் தெளிவூட்டல் தேவை என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகத் தெரிவித்தனர்.

இதையடுத்தே இது தொடர்பில் சிறப்புக் கூட்டமொன்றை தொடர்புடைய நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்வதாக ஆளுநர் தெரிவித்தார். (ம-26-125)




## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 23.07.1950 மறைவு 27.12.2023

எமது அலுவலகத்தில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **வேதநாயகம் பிரதீஸ்குமாரன்** அவர்களின் அன்புத் தாய்

**விமலராணி வேதநாயகம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*

**யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **தங்கராசா கண்ணதாசன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**தாமோதரம்பிள்ளை தங்கராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 08.02.1946 மறைவு 25.12.2023

*பிரிவால் துயருறும்:*

**யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

**35 ஆண்டுகள் கல்விப்பணியாற்றி ஓய்வுபெறும்**

**திரு.வல்லிபுரம் நடராசா (SLPS - 1)**

**(கோட்டக்கல்விப் பணிப்பாளர் - சாவகச்சேரி)**

Best Wishes



சேவை விவரம்:

1. யா/வரணி மகாவித்தியாலயம் - ஆசிரியர் 17.08.1988 - 25.04.1999
2. யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் - ஆசிரியர் 26.04.1999 - 17.09.2002
3. யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆசிரியர் : 18.09.2002 - 01.12.2002 அதிபர் 2-1 : 02.12.2002 - 30.04.2003
4. யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் அதிபர் 2-1 : 01.05.2003 - 31.05.2008
5. யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் அதிபர் -1 : 03.11.2008 - 29.06.2015
6. கோட்டக் கல்வி அலுவலகம்-சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் : 30.06.2015-28.12.2023

கோட்டக்கல்விப் பணிப்பாளராக 07 வருடங்களுக்கு மேலாக திறம்பட பணியாற்றி இன்றையதினம் ஓய்வு பெறுகின்ற திரு. வல்லிபுரம் நடராசா அவர்களின் சேவையினை பாராட்டுவதுடன் மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்து ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**வாழ்த்துவோர்: பணியாளர் நலன்புரிக் கழகம்**
**வலயக்கல்வி அலுவலகம் -தென்மராட்சி**

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் பஞ்சநாதன்

**(முன்னாள் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மேற்பார்வையாளர்)**



**பிறப்பு 26.11.1942** **இறப்பு 27.12.2023**

பருத்தித்துறை தும்பளையை பிறப்பிடமாகவும் மத்தொனி கரவெட்டி மேற்கை வசிப்பிடமாக வும் கொண்ட இராமலிங்கம் பஞ்சநாதன் (27.12.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், விஜயலட்சுமியின் பாசமிகு கணவரும், சோபனா (லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும், நந்தகுமார் (லண்டன்) அவர்களின் பாசமிகு மாமனாரும், நிகர்ஷன், நர்த்தனா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2023) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS76578) A-1


### யாழ்ப்பாணம் திரும்பிய

# கில்மிஷாவுக்கு நேற்று அமோகமான வரவேற்பு



யாழ்ப்பாணம், டிசெ. 29

இந்தியாவின் தனியார் தொலைக்காட்சியொன்றால் நடத்தப்பட்ட 'சரிகமப' பாடல் போட்டியில் முதலிடம் பிடித்து மகுடம் சூடிய யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த சிறுமி கில்மிஷா யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தினூடாக நேற்றுத் தாயகம் திரும்பினார். அவருக்கு உற்சாகமான வரவேற்பு வழங்கப்பட்டது.

விமான நிலையத்தில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் கில்மிஷாவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் வாகனத் தொடரணி மூலம் அவரது சொந்த ஊரான அரியாலை நோக்கி காங்கேசன்துறை வீதி ஊடாக கில்மிஷா அழைத்துச் செல்லப்பட்டார். இதன்போது தெல்லிப்பழை, மல்லாகம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் கில்மிஷாவுக்கு மக்களால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரியாலை ஸ்ரீ கலைவாணி சனசமூக நிலைய மைதானத்தில் வரவேற்பு ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் கில்மிஷாவை வரவேற்கும் பிரமாண்ட வரவேற்பு விழா நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-66)

## கொவிட் தொற்றால் மேலும் ஒருவர் பலி!

கொழும்பு, டிசெ. 29

கொவிட் தொற்றால் நாட்டில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். கம்பஹா மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 63 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இரு மணித்தியாலயங்களில் அவர் உயிரிழந்துள்ளார். அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் . 23 . 02 . 1945



மறைவு . 28 . 12 . 2023

## துரைராசா கமலாதேவி

கொட்டடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா கமலாதேவி நேற்று (28.12.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் சரஸ்வதியம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரைராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற யோகம்மாவின் (குஞ்சுமணி) அன்பு சகோதரியும், உமாதேவி, வசந்தாதேவி, நீதிராசா, கிருஸ்ணராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மோகனதாஸன், உதயகுமார், கஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டிலக்ஷனா, ஸ்ரீராம், தேனுஜன், தேனிலா, சியானுகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2023) வெள்ளிக்கிழமை நீர்வேலி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கட்டிமேடை,**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

(cc , 27481) N-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 323 3136**
**077 669 9625**

# பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான **LRDC** பாதுகாப்பு நிறுவனத்திற்கு வடமாகாணத்தில் 05 மாவட்டங்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கான வெற்றிடங்கள் உள்ளது.

*** ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**
*** வயது எல்லை 18-50 வரை.**
*** நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.**
*** கல்வித் தகைமை - க.பொ.த. சாதாரண தரம்.**



**சேவை நிலையங்கள்**

1. யாழ். போதனா வைத்தியசாலை.
2. நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை.
3. சிறிலங்கா பெற்றோலிய கூட்டுத்தாபனம்.
4. நொதேன் சென்றல் வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

**தொடர்பு:-**
**077 433 1841**
**071 559 0908**
**070 471 0097**

(CS 53316) A-1

# ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவிற்கான கூட்ட அறிவித்தல் 30.12.2023 - சனிக்கிழமை

மேற்படி எமது சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர் தெரிவு நடைபெறாத பின்வரும் கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவுக் கூட்டம் எதிர்வரும் 30.12.2023 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடத்துவதற்கு சங்கத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த கிளைகளின் தகுதியுடைய அங்கத்தவர்களுக்கு தவிசாளரால் தனித்தனியாக கூட்ட அழைப்பு கடிதம் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறாத தகுதியுடைய அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டு தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு சமூகம் அளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டம் தொடர்பான விபரம்**

| இல. | கிளைகள் | கிளையின் பெயர் | இடம் | கூட்டம் நடைபெறும் திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | கிளை-09 | புளியங் கூடல் வடக்கு | சங்க கிளைக் கட்டடம், புளியங்கூடல் மினி கோப் சிற்றி, புளியங் கூடல். | 30.12.2023 | மு.ப. 10.00 |
| 02 | கிளை- 12 | சரவணை | ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம், நாரந்தனை கிழக்கு, சரவணை. | 30.12.2023 | மு.ப. 10.00 |
| 03 | கிளை- 14 | எழுவை தீவு | சங்க கிளைக் கட்டடம், எழுவைதீவு, ஊர்காவற்றுறை | 30.12.2023 | மு.ப. 10.00 |

செயலாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை.

(CR 41393) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 11 . 1938



மறைவு 27 . 12 . 2023

## திருமதி தாமோதரம்பிள்ளை - தவம் (தவமணி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தாமோதரம்பிள்ளை தவம் (தவமணி) 27.12.2023 புதன்கிழமை அன்று சிவமதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - செல்லம்மா தம்பதியினரின் செல்ல மகளும், ஆறுமுகம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னார் தர்மசீலன், கலாநிதி, தியாகசீலன், கேமலாநிதி ஆகியோரின் அருமைத்தாயாரும், வனமாலா, ஜீவேந்திரா, பிரியா, பத்மஸ்ரீ ஆகியோரின் அன்பு மாமியாரும், கோகுலன், தனுஷியா, மயூராஜ், லக்ஷியா, லக்ஷன், குயிலி, கயனி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், உபயசேகரத்தின் அருமைச்சகோதரியும், யோகேஸ்வரியின் அன்பு மைத்துனியும், கோபி, செந்தூரன் ஆகியோரின் தந்தைவழி ஆசை மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

**பிள்ளைகள்:**
**தா. தர்மசீலன் +4474501818**
**கலாநிதி ஜீவேந்திரா +447737971405**
**தா. தியாகசீலன் +447551245890**
**லண்டன் செல்வன்**
**கேமலாநிதி. பத்மஸ்ரீ +442089580285**

(CS 27496) S-1

**தகவல்:**
**அ. உபயசேகரம்**
**(சகோதரன்)**
**அரியாலை**
**076 196 6047**
**021 221 6531**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு • 17 • 11 • 1948



உதிர்வு • 10 • 01 • 2013

## அமரர் இராசகாரியர் இலட்சுமிநாதன்

**(முன்னாள் நீர்ப்பாசன இலாகா மேற்பார்வையாளர்)**

*திதி: திருதியை*

**அணையாத இதய தீபமே அன்புரு ஆனவரே**
**ஆண்டொன்று ஓடி மறைந்தது ஐயா**
**விண்ணுலகம் சென்ற உங்கள் நினைவுகள்**
**நீக்கமற நிறைந்து எம் நெஞ்சில்**
**ஓயாது கருமமாற்றும் எம்குல தெய்வமே**
**ஓய்வு கொள்ளட்டும் உம் ஆன்மா**
**கட்டை பறிச்சான் - பிள்ளையார்**
**பாதார விந்தங்களில்!**

(CS 27498) S-1

**ஆசிரியர் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**நினைவுகளுடன்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகன், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் பெரியளவில் பணவீக்கம் அதிகரிக்கும்

## பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ.29**

**எதிர்காலத்தில் பணவீக்கம் பெரிய அளவில் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது என்று பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பணவீக்கத்தின் தாக்கம் மக்களிடையே பெரியளவில் இருக்கும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.**

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்படுவதே இதற்கு முக்கியமான காரணமாகும் என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

வரி விதிக்கப்படாத பல்வேறு வகையான பொருள்களுக்கு வரி விதிக்கப்படுவதாலும், ஏற்கனவே வரி விதிக்கப்படும் பொருள்களின் மீதான வரிச்சுமை அதிகரிப்பதாலும் எதிர்காலத்தில் பணவீக்கம் அதிகரிக்கும். எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்படுவதன் விளைவுகளை மக்கள் ஏற்கனவே அனுபவிக்கின்றனர்.

வற்வரி அதிகரிப்பால் பொருள்களின் விலை அதிகரித்துள்ளதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக சில வர்த்தகர்கள் ஏற்கனவே பொருள்களை சேமித்து வைத்து, பின்னர் விற்பனை செய்வதற்கு முயற்சிக்கின்றனர்.

வரி விதிப்பின் மூலம் வர்த்தகர்கள் தேவையற்ற அனுகூலங்களைப் பெறுவதைத் தடுக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது - என்றார். (எ-இ)

# ஐ.தே.க. தலைமைத்துவசபை பெயர் விவரங்கள் கசிந்தன!

கொழும்பு, டிசெ.29

எதிர்வரும் ஜனவரியில் உருவாக்கப்படவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையில் இடம்பிடிப்பவர்களின் பெயர் விவரங்கள் அரசியல் வட்டாரங்களில் கசிந்துள்ளன.

ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன, தவிசாளர் வஜிர அபேவர்த்தன, உப தலைவர் ரவி கருணாநாயக்க, உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம், தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, ஆளுநர் நவீன் திஸாநாயக்க, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோரே தலைமைத்துவ சபையில் இடம்பிடித்துள்ளனர். (ம-125)

# சு.கட்சி கோரிக்கை விடுத்தால் ஜனாதிபதித் தேர்தலில் தயாசிறி

கொழும்பு, டிசெ.29

சுதந்திரக் கட்சி கோரிக்கை விடுத்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார் என்று அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திரக் கட்சியில் இருந்து என்னை இடைநிறுத்தி இருந்தாலும் கட்சியில் இருந்து நான் வெளியேறவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டால் அதற்கு ஆதரவு வழங்குவேன். அதேபோல கட்சி கோரிக்கை விடுத்தால் நானும் களமிறங்க தயாராகவே இருக்கின்றேன் - என்றார். (ம-44)

# ஆட்சியைக் கைப்பற்றுவதுதான் பொதுஜன பெரமுனவின் இலக்கு

கொழும்பு, டிசெ. 29

நாடாளுமன்றத்தில் எதிரணிக்குச் செல்வது எமது நோக்கம் அல்ல. அடுத்த தேர்தலிலும் ஆட்சியைக் கைப்பற்றுவதே எமது இலக்கு - இவ்வாறு சூளுரைத்துள்ளார் பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த வருடம் தேர்தல் வருடம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு நாம் தயார். கட்சியில் இருந்து விலகியவர்களுக்குப் பதிலாகப் புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி எமது இலக்கு அல்ல. அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்பது எங்கள் எதிர்பார்ப்பு. எதிர்க்கட்சிக்குச் செல்லும் எதிர்பார்ப்பு எம்மிடம் இல்லை. வரிகளை நீக்க முடியாது, வரிகள் இருக்கும். அதாவது மக்களுக்கு நியாயமான வரி முறையை அறிமுகப்படுத்தவேண்டும் என்று நான் கூறுகிறேன் - என்றார். (ஒ-44)

# 10 நிபந்தனைகள் விதிக்கும் மொட்டு

கொழும்பு, டிசெ. 29

மொட்டுக்கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களுக்குப் பத்து நிபந்தனைகளை அந்தக் கட்சி விதித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் 51 சதவீத வாக்குகளைப் பெறக்கூடிய பரந்துபட்ட கூட்டணியொன்றை உருவாக்க வேண்டும், சர்வதேச தரத்துக்கு இலங்கையின் கல்வித்தரத்தை உயர்த்தவேண்டும், விவசாயத்துறையை மேம்படுத்தும் திட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டும், உரமானியங்களைவழங்கவேண்டும், வறுமையை ஒழிப்பதற்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் திட்டங்களை வகுக்கவேண்டும், வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும் வற்சுமையிலிருந்து மக்களைவிடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும், அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தக்கூடாது, இலங்கையிலுள்ள 17 பல்கலைக்கழகங்களையும் உலகின் முதல் ஆயிரம் தர வரிசைக்குள் கொண்டு வர வேண்டும், வருடாந்தம் 50 இலட்சம் உல்லாசப்பயணிகளை நாட்டுக்கு அழைத்து வரும் வகையில் திட்டங்களை வகுக்கவேண்டும்,

டொலரின் உறுதிப்பாட்டை பேண வேண்டும் ஆகிய நிபந்தனைகளே விதிக்கப்பட்டுள்ளன. (ஒ-6)

### முதல் அமைச்சரவைக் கூட்டம்

புத்தாண்டின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

அதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய ஆண்டுக்கான வேலைத்திட்டங்களை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சகல அமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# புடின், பைடனை விட சிறந்தவராம் ரணில்!

## வஜிர கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 29

அமெரிக்கா, ரஷ்யா என்பன பெரிய நாடுகளாக இருக்கலாம். ஆனால் புடின், பைடனை விடவும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'அனைவரும் ஒன்றிணைவோம் என ஜனாதிபதி தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருகின்றார். நாம் பிளவுபட்டு நின்றால்தான் வெளிநாட்டு சக்திகள் நாட்டுக்குள் நுழையும். அரசியல் கட்சிகள் மற்றும் இடதுசாரிகள் தேசிய ஒற்றுமைக்காக ஒன்றிணையவேண்டும். அப்போது ஜனாதிபதியால் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கமுடியும். நாம் பிரிந்து நின்றால் நாடு விழும். நாட்டை நிர்வகிக்கக் கூடிய சிறந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதால்தான் நாம் அவர் பின்னால் நிற்கின்றோம். அவர் ஒரு கோடிக்கும் அதிகமான வாக்குகளை நிச்சயம் பெறுவார்.

அமெரிக்க ஜனாதிபதி பைடன், ரஷ்யா ஜனாதிபதி புடின் ஆகியோரைவிடவும் ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர் என நான் குறிப்பிட்டிருந்தேன். ஆம். புடின் 1999 இல்தான் அரசியலுக்கு வந்தார். நாடுகள் பெரிதாக இருக்கலாம், சொத்துகள் இருக்கலாம். பொருளாதார ரீதியில் முன்னேறி இருக்கலாம். ஆனால், எமது நாட்டு தலைவருடன் ஒப்பிடமுடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் செல்லும்போது, அவர் ஜனாதிபதி ஆவார் எனக் கூறினோம். மறுநாள் என்னை பைத்தியம் என்றார்கள். நடந்தது என்ன? ஏனெனில் ரணிலின் நகர்வுகள் எமக்குத் தெரியும்' - என்றார். (ம-44)

# 'மெக்கானிக்' ரணில் புகழ்கிறார் டக்ளஸ்!

கொழும்பு, டிசெ.29

பிரேக்டவுன் நிலையிலிருந்த வாகனத்தை ஓட வைத்தவர் ரணில். ஆதலால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவரையே நான் ஆதரிப்பேன் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரகலய போராட்டக் காலத்தில் போராட்டக்காரர்கள் தடைகளை உடைத்து முன்னேறியபோது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஓடமுயன்றனர். அவ்வாறே நானும் ஓடமுயன்றேன். ஆனால், ரணிலை ஜனாதிபதியாக்கினால் நாங்கள் இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட்டு தலைநிமிர முடியும் என்று தெரிவித்தேன். ரணிலும் அப்படியே ஜனாதிபதியானார். அவர் பிரேக்டவுன் நிலையிலிருந்த வாகனத்தை தற்போது ஓடவைத்துள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே நான் ஆதரவை வழங்குவேன். அவ்வாறு வழங்கினால் அவர் வாகனத்தை மீள்திருத்தம் செய்துவிடுவார். பெரமுனவில் இருந்து யார் போட்டியிட்டாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே எனது ஆதரவு - என்றார். (ம-125)

# சாமரவின் ஆதரவு ரணிலுக்காம்

நாட்டில் ஏற்பட்டுள்ள கஷ்டத்தை போக்கியது தற்போது உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. எனது ஆதரவு ரணிலுக்கே. அவரின் செயற்பாட்டினால் தற்போது நாடு முன்னேறி வருகிறது என ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

அதிகமானவர்கள் தற்போதைய ஜனாதிபதி ரணிலையே தெரிவு செய்வார்கள். கடந்த காலங்களில் எதிர்நோக்கிய பிரச்சினை மக்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே மக்கள் ரணிலுக்கு ஆதரவு வழங்குவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக்குள்...

இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் கட்சியின் அரசியல் குழு ஜனவரி 10ஆம் திகதி ஆராயவுள்ளது.

**சம்பந்தனின் கடிதம்**

இந்த விவகாரம் தொடர்பில் மாவை சேனாதிராசாவுக்கு, சம்பந்தன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் உள்ளதாவது:- 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு இலங்கைத் தமிழரசுக்கட்சி திருகோணமலை மாவட்டக் கிளை கலைக்கப்பட்டு புதிய கிளையை உருவாக்க பத்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் கிளைகள் புனரமைக்கப்பட்ட சமயத்தில் தெரிவுக் குழுவின் பூரண பங்களிப்பின்றி பணம் மற்றும் உலர் உணவுப் பொதி வழங்குவதாக மக்களை அழைத்து கிளைகள் அமைத்ததாக அறிகிறேன். இது தவறான வழிமுறையாகும்.

தமிழ் அரசுக்கட்சியின் எனது ஆதரவாளர்கள், மூத்த செயற்பாட்டாளர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டனர். உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்புமனுக் கோரிய சமயத்தில் தகைமையான சிறப்பான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவுக் குழு ஒன்றை அமைக்கும்படியும் நான் சில பெயர்களை பரிந்துரை செய்திருந்தேன். அதனை உதாசீனப்படுத்தினர்.

**துண்டிக்கப்பட்ட தொலைபேசி அழைப்பு**

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக்கட்சியின் அங்கத்தவர் என்ற வகையிலும் சில வேட்பாளர்களைத் தெரிவு செய்திருந்தேன், அதனையும் நிராகரித்தனர். வேட்பாளர் தெரிவின்போது எனது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவிப்பதற்காக தொலைபேசியில் பல தடவைகள் தொடர்பு கொண்டபோது தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்பட்டது. தங்களுக்கு ஏற்றவாறு வேட்பாளரை தன்னிச்சையாக தெரிவுசெய்து கொண்டனர். இந்தச் செயலானது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

**தெரிவில் குளறுபடி**

இது சம்பந்தமாக திருகோணமலையில் உள்ளூராட்சி வேட்பாளர் தெரிவில் என்னுடைய கருத்துகளையும், ஆலோசனைகளையும் புறம்தள்ளி குளறுபடி நடக்கிறது என தமிழ் அரசுக்கட்சியின் தலைவரையும், செயலாளரையும் கவனத்தில் கொள்ளுமாறு அறிவித்தேன். இதுவரைக்கும் செயலாளர் எந்தவித விளக்கமும் கோரவில்லை.

**நடவடிக்கைக்கு ஏன் தாமதம்?**

கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதியன்று மன்னாரில் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக்கட்சிக் கிளை அமைப்பு, உள்ளூராட்சி வேட்பாளர் பட்டியல் தெரிவில் நடந்த முறைகேடு சம்பந்தமாக தமிழ் அரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் நிர்வாகச் செயலாளரால் முறைப்பாட்டுக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. அன்றைய தினமே மத்திய குழுவின் சம்மதத்துடன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் யோகேஸ்வரன் தலைமையில் ஒழுக்காற்றுக் குழு அமைக்கப்பட்டதை அறிந்தேன். ஒழுக்காற்றுக் குழு அமைக்கப்பட்டு ஒன்பது மாதம் கடந்த நிலையில் கிளை அமைப்பு, உள்ளூராட்சி வேட்பாளர் தெரிவில் எனது ஆதரவுச் செயற்பாட்டாளர்கள் புறந்தள்ளப்பட்டது சம்பந்தமாக இவ்வளவு காலமும் ஏன் சாட்சியம் பெறவில்லை என்பதை வலியுறுத்தி கடந்த நவம்பர் மாதம் 3ஆம் திகதி ஆட்சேபனைக் கடிதம் ஒன்றைத் தலைவரிடம் சமர்ப்பித்தேன்.

**எனக்கே தெரியாமல் மாநாடா?**

நவம்பர் மாதம் 5ஆம் திகதி வவுனியாவில் மத்திய குழுக் கூட்டத்தில், ஒழுக்காற்றுக் குழுவின் தாமதம் குறித்தான எனது ஆட்சேபனைக் கடிதம் சம்பந்தமாக ஆராயமல் திருகோணமலை தமிழ் அரசுக் கட்சியின் மாநாட்டை எனது மாவட்டத்தில் எனக்குத் தெரியாமல் நடத்த தீர்மானம் எடுத்திருப்பதை தவறான விடயமாகப் பார்க்கிறேன்.

திருகோணமலை மாவட்டத்தில் நடந்த கிளை அமைப்பு விதம் ஏற்றுக் கொள்ள முடியாத பெரும் குற்றமாகும் என டிசெம்பர் 16ஆம் திகதி அன்று தாங்களும் (மாவையும்) கனகசபாபதியும் என்னைச் சந்தித்தபோது இதுகுறித்து தெரிவித்திருந்தேன்.

இந்தமுறைகேடான சம்பவங்களுக்கு ஒழுக்காற்றுக் குழு மூலம் நீதியான விசாரணை மேற்கொண்டு, திருகோணமலை மாவட்டத்தின் அனைத்துக் கிளைகளையும் கலைத்து புதிய கிளைகள் உருவாக்கிய பின்பு தான் தமிழ் அரசுக்கட்சி மாநாட்டை நடத்தும் படி ஆணித்தரமாகக் கூறியிருந்தேன்.

கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் கொழும்பில் வைப்பதாக முன்னர் எனக்குத் தெரியப்படுத்தியிருந்தீர்கள். ஆனாலும் அந்தக் கூட்டம் கொழும்பில் நடத்தப்படவில்லை. இருந்தபோதும் கடந்த 18ஆம்திகதியன்று திருகோணமலையில் எனக்குத் தெரிவிக்காமலேயே அரசியல் குழுக்கூட்டத்தை நடத்தியிருந்தீர்கள். எனது மாவட்டத்தில் எனக்குத் தெரியாமல் அரசியல் குழுக் கூட்டத்தை நடத்துவது பற்றி எனக்கு எவ்வித அறிவித்தலும் வழங்கப்படாமையானது பல சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. இது தவறான விடயமாகும்.

**வர்த்தகமுறையில் கிளைத்தெரிவு**

தங்களுக்கு இவ் விடயம் சம்பந்தமாக திருகோணமலையில் 'வர்த்தக' முறையில் கிளை அமைப்பு வேட்பாளர் தெரிவில் நடந்த முறைகேடுகள் சம்பந்தமாக பலமுறை தெரிவித்திருந்தேன். ஆகவே திருகோணமலை மாவட்ட தமிழ் அரசுக் கட்சிக் கிளைகளைக் கலைத்து நீதியான முறையில் கிளை அமைக்கப்பட்ட பின்பு தான் திருகோணமலையில் தமிழரசுக் கட்சி மாநாடு நடத்தவேண்டும் என்பதை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன் - என்றுள்ளது.

**மாவையின் நிலைப்பாடு**

இது தொடர்பான கடிதம் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, கட்சியின் செயலாளர் பா.சத்தியலிங்கம் ஆகியோருக்கு நேரிலும் வட்ஸ் அப் வழியாகவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடிதம் தொடர்பில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் உதயன் நேற்றுமுன்தினம் வினவியபோது, அவ்வாறான கடிதம் எதுவும் தனக்குக் கிடைக்கவில்லை என்று மாவை தெரிவித்திருந்தார். எனினும், நேற்று இரவு கடிதம் கிடைத்ததை அவர் உறுதிப்படுத்தினார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பிலும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி இரா.சம்பந்தனின் இல்லத்தில் விரிவான ஆலோசனைகள் நடத்தப்படும். இந்த ஆலோசனைகளின் பின்னர் மத்தியகுழுவின் ஒப்புதலோடு இறுதிமுடிவு எடுக்கப்பட்டு, அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும்' என்று மாவை சேனாதிராசா நேற்றிரவு 'உதயனுக்குத்' தெரிவித்தார். இவ்வாறானதொரு கடிதம் கிடைக்கப்பெற்றதாக அறிகின்றேன் என்று கட்சியின் செயலாளர் பா.சத்தியலிங்கமும் உதயனுக்கு உறுதிப்படுத்தினார்.

கட்சியின் பெருந்தலைவருக்கே தெரியாமல் கட்சியில் முடிவுகள் எடுக்கப்பட்டமை, சம்பந்தரை ஓரங்கட்டி அவருக்கு ஆதரவானோரை கட்சிக்குள் புறக்கணித்தமை, மாநாட்டை நடத்தும் முடிவை சம்பந்தருக்கு அறிவிக்காமலேயே எடுத்தமை போன்ற விடயங்களை கடிதம் மூலம் சம்பந்தர் பகிரங்கப்படுத்தியிருப்பதால், கட்சிக்குள் பெரும் பிளவு ஏற்படுவதை உறுதி செய்யமுடிகின்றது. (அ-ம-26-110)

## 'புரட்சிக்...

படங்கள் மூலம், தமிழ்த் திரையுலகில் தனக்கென தனி முத்திரை பதித்து தவிர்க்க முடியாத ஆளுமையாக வலம் வந்த விஜயகாந்த், ஈழத் தமிழர்களிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவராக இருந்தார். ஈழத்தமிழர்களின் துன்பங்களை உணர்ந்து அவர்களுக்காக சில காலம் தன் பிறந்தநாள் கொண்டாட்டங்களைத் தவிர்க்கும் அளவுக்கு அவர் ஈழத்தமிழர்களை நேசித்தார். மிகச்சிறந்த வள்ளலாகவும் அறியப்படுகின்றார்.

2005ஆம் ஆண்டு தமிழக மக்களின் கோரிக்கைக்கு இணங்க 'தேசிய முற்போக்குத் திராவிடக் கழகம்' எனும் பெயரில் கட்சியை அமைத்து அரசியலுக்குள் பிரவேசித்தார். தன் வெளிப்படையான பேச்சுகள் மூலம் தமிழகத்தின் இருபெரும் அரசியல் தூண்களாக உள்ள அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். மக்கள் அவரை அங்கீகரித்து தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவராக உயர்த்தினார்கள்.

கடந்த சில வருடங்களாகவே உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர் வீட்டில் ஓய்வெடுத்து வந்தார். அவருக்கு சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையும் செய்யப்பட்டிருந்தது. திடீர் சுகவீனம் ஏற்பட்டு சுவாசிக்கச் சிரமப்பட்ட அவர் கடந்த செவ்வாய்க்கிழமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சுவாச உயிர்காப்புக் கருவிகள் மூலம் அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. விஜயகாந்த் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளார் என்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்தத்தகவல் வெளிவந்து சிலநிமிடங்களில் சிகிச்சை பயனளிக்காமல் அவர் இவ்வுலகை விட்டுப்பிரிந்தார். (அ-ம-இ)

## டக்ளஸுடன்...

கூட்டத்தின்போது, இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பிலும் நீண்டநேரம் விவாதிக்கப்பட்டது. இதன்போது 'அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தியாவுக்குச் சென்று இது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதன் மூலம் தீர்வுகளைக் காணமுடியும்' என்று தெரிவித்தார். இதற்குப் பதில் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கடற்றொழில் அமைச்சராக இருக்கும் நீங்கள் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைக்குத் தீர்வுகாண முடியாமல் திண்டாடுகின்றீர்கள். கடற்படையால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதென்றால் அவர்களை மக்களின் காணிகளிலிருந்து வெளியேறி யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லச்சொல்லுங்கள் - என்றார். இதையடுத்து சபையின் வாய்த்தர்க்கமும் குழப்பமும் ஏற்பட்டது. இதன்போது, வடமராட்சி மீனவ அமைப்பின் பிரதிநிதியாகவும் அமைச்சரின் அரசியல் பிரதிநிதியாகவும் பங்குபற்றிய ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினரின் கதிரைவரை சென்று அவரை அச்சுறுத்தியதுடன் வாய்த் தர்க்கத்திலும் ஈடுபட்டார். அவரை அடக்காமல் அமைச்சரும், ஏனைய அதிகாரிகளும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். (அ-ம-26-125)

## பொலிஸாரின்...

கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் போதைப்பொருளைக் கடத்த முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணத்தில் அவருக்குச் சொந்தமாக உள்ள வீட்டில் பொலிஸார் தேடுதல் நடத்துவதற்காகச் சென்றபோது வீட்டைப் பரிசோதனையிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. நீண்டநேரம் பொலிஸார் வெளியில் காத்திருந்தனர். இந்த விடயம் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதன்போதே 'போதைப்பொருள் கடத்தலில் எவர் ஈடுபட்டாலும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்' என்று பொலிஸாரைக் கடிந்துகொண்டார் டக்ளஸ். இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், போதைப்பொருள்களை மிகக்குறுகிய அளவில் வைத்திருக்கும் நபர்களையே பொலிஸார் கைது செய்கின்றனர். மாறாக பெரும்முதலைகளை கோட்டைவிடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டினார். (அ-ம-26-125)

## வனவளத்...

முன்வைக்கப்பட்டது. இதனால், நான் இதுகுறித்த கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தேன். கலந்துரையாடலின்போது எந்தவொரு முன்மொழிவையும் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், மாவட்டச் செயலரான ஏன்னாலோ அல்லது மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு ஆணைக் குழுவாலோ எந்தக் காணிகளும் அவ்வாறு வனவளத் திணைக்களத்துக்கு வழங்கப்படவில்லை. ஆனால், அண்மைக்காலமாக இது தொடர்பில் தவறான செய்திகள் சில பரப்பப்படுகின்றன. மக்கள் இது தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை - என்றார். (அ-ம-125-26)

## இந்த வருடம்...

தெரிவித்தார். டிசெம்பர் மாதத்தில் மட்டும் ஆயிரத்து 276 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

டெங்குத் தொற்றால் இம்மாதம் 3 பேர் உயிரிழந்துடன், இவ்வருடம் மட்டும் ஆறு பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயகாந்துக்கு யாழில் பதாகை




தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவரும், தென்னிந்தியத் திரையுலகின் முன்னணி நட்சத்திரமுமான விஜயகாந்த் நேற்றுக் காலமான நிலையில், அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பரவலாக பதாகைகள் வைக்கப்பட்டன. (ம-26)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S.றோட், சுன்னாகம்.
BARATHY-சித்தன்கேணி
எமது மூன்று நிறுவனங்களிலும்
A/L 2025
கலை - வர்த்தகம்
மீண்டும் புதிய பிரிவு நாளை ஆரம்பம்
30.12.2023 - சனிக்கிழமை
ஆரம்பத்திலிருந்து சகல பாடங்களும் கற்பிக்கப்படும்
இதுவே இறுதிப்பிரிவு என்பதனால் அனுமதிகளை தவறவிடாதீர்கள்.
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியக் குழுவினால் கற்பிக்கப்படுகிறது.
விடுமுறைக்கால வகுப்புக்கள் தினமும்.
நேர அட்டவணை தொடர்புகளுக்கு:
யாழ்ப்பாணம் - 077 220 9651
சுன்னாகம் - 076 638 5294
சித்தன்கேணி - 077 940 8682

காணிவிற்பனைக்கு
இருபாலை டச்சு வீதி, இராஜேஸ்வரி அம்மன் கோவிலுக்கு அண்மையில் 02 நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு
076 307 7148

## மாணவர்களுக்கு மாவா: இளைஞர்கள் கைது

மாணவர்களுக்குமாவா பாக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில், கல்வியங்காட்டுப் பகுதியில் வைத்து இளைஞர்கள் சிலர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 7 கிலோ 310 கிராம் மாவா பாக்கு கைப்பற்றப்பட்டுள்ளது. கைதான சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-23)

சிறிராம் ஜுவல்லர்ஸ்
இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி

* செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.
தொடர்புக்கு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

## மரண அறிவித்தல்

### ஜெயக்குமார் கோனேஸ்வரி



Kondavil North
சோளத் தோட்டம், கோண்டாவில்.
தொடர்பு: 077 160 4823

தோற்றம் 23.09.1977 மறைவு 26.12.2023

ஜெயக்குமார் கோனேஸ்வரி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயக்குமாரின் அன்பு மனைவியும், சாறுஜன் பிரவீனாவின் பாசமிகு அன்னையும், ராஜரட்ணம் நாகம்மாவின் புதல்வியும், சாந்தி, வசந்தி, விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

தகவல்:
அக்காவின் குடும்பத்தினர்.

(CS 275003A-1)

## மரண அறிவித்தல்



### திருமதி சௌபாக்கிய கௌரி பத்மநாதன்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், மகாஜனாக்கல்லூரி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சௌபாக்கிய கௌரி பத்மநாதன் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், மகாஜனாக்கல்லூரி) அவர்கள் கடந்த (27.12.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரட்ணம் புனிதவதி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற மருதப்பா சின்னம்மா தம்பதியரின் மருமகளும், பத்மநாதன் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், அருணோதயா கல்லூரி), அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான ரவிகுலராஜன், சோமஸ்கந்தன், திருமகள் மற்றும் செந்தில் செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜேஸ்வரி, ஜெயரட்டணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி தம்மளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. பத்மநாதன்
021 224 3658

(cr , 41401) N-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 07 . 1943



மறைவு 28 . 12 . 2023

### திருமதி இராஜகோபால் கமலாதேவி

காரைநகரைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜகோபால் கமலாதேவி அவர்கள் நேற்று (28.12.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகர் - பொன்னம்மா தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராஜகோபால் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம், தங்கவேலு, கனகம்மா, மற்றும் பேரம்பலம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தியாகேஸ்வரி, கோமேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி, மன்மதராஜ், மனோராஜ் (Mansy Constructions) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் உதயகுமார் (கனடா), பிரபாகரன் (பிரான்) - ராஜன் சிற்பாலயம், ராகினி, சியாமளா (ஆசிரியை-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சரண்ஜன், சனோஜன், கஜானி, அபிநயன், அனுஜன், தமிழ்மாறன், தமிழ்க்குமரன், உமையாழினி, ஷங்கீர்த்தன், (Faculty of Architecture, Moratuwa) திவியன், கிரீஷன், அனிஷ், நிவின், நிகில், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பிரான் (ராஜன் சிற்பாலயம் ) 0779240177
மன்மதராஜ் (அப்பன்) 0779565957
மனோராஜ் (Mansy Constructions)
0776012986

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41398) A-1


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org